1971 பிப்ரவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கூட்டுறவு சம்பந்தப் பட்ட கேள்வி. நீங்கள் கேட்பது மூலக்கேள்விக்குச் சம்பந்தப் பட்டதல்ல.

பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் வேலை நிலைமைகள்.

*வினா எண். 292—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) பீடி—சுருட்டு தொழிலாளர் சட்டத்தை அமுல் நடத்துவது பற்றி கண்காணிக்க உள்ள முத்தரப்புக் கமிட்டிக் கூட்டம் 1979 டிசம்பரில் நடந்ததில் விசேஷமாக கவனிக்கப்பட்ட ''வீட்டில் வேலை'' செய்யும் (Home Workers) தொழி லாளர்கள் பற்றி என்ன முடிவு செய்துள்ளது ?

(ஆ) இச் சட்டத்தை அமுல் நடத்துவதில் பீடி முதலாளிகள் இதுவரை ஒப்புக் கொள்ளாதவை கள் எவை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 15-12-1979-ல் சென்னையில் தொழிலாளர் துறைத் துணை ஆணை யரும் (ஆய்வு) மற்றும் பீடி மற்றும் சுருட்டுத் தொழிற்சாலை களின் தலைமை ஆய்வாளரின் தலைமையில் முத்தரப்ப குழு வின் ஏழாவது கூட்டம் நடைபெற்றது. அப்போது தொழிலாளர் பிரதிநிதி ஒருவர் கீழ்க்கண்ட கருத்துக்களைச் சொன்னார் :—

(1) பீடி மற்றும் சுருட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் வீட்டுத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட 1966-ஆம் ஆண்டு பீடி மற்றும் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் 29-வது பிரிவை தீவிரமாக நடை முறைப்படுத்தல் வேண்டும்.

(2) இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் வீட்டுத் தொழிலாளர் களையும் பீடித் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழி லாளர்களுக்கு இணையாகக் கொள்ள வேண்டும்.

(3) மேற்கண்ட சட்டத்தின்கீழ் இவ் வீட்டுத் தொழி லாளர்களும கொண்டுவரப்பட வேண்டும்.

(4) மேற்கண்ட சட்டத்தின்கீழ் எல்லா நன்மைகளும் இவ் வீட்டுத் தொழிலாளர்களுக்கும் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

(5) அவசியமானால் மேற்கண்ட கருத்துக்கள் குறித்து அரசின் விளக்கத்தைப் பெறுதல் வேண்டும்.

[1981 பிப்ரவரி 27

மேற்கூறிய தொழிலாளர் பிரதிநிதியின் கருத்துக்களைக் குறித்து அரசின் நிலையை அறிவதற்கு மேற்கண்ட முத்தரப்புக் குழு பொருத்தமானதொரு அமைப்பு அல்லவென்றும், மேற் கண்ட சட்டத்தின் 29-வது பிரிவு குறித்து அரசின் விளக்கத்தை அறிய தேவையில்லையென்றும் வேலையளிப்போர் சார்பாக எடுத்துச் சொல்லப்பட்டது.

இவ்வாறு இருதரப்பிலும் ஒருமித்த கருத்து நிலவாத காரணத்தால் வீட்டுத் தொழிலாளர்கள் குறித்த விவாதம் தொடர்ந்து நடை பெறவில்லை.

(ஆ) 1966 ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம். இத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் வீட்டுத் தொழிலாளர்களுக்கும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, பீடி தொழிலாளர் சட்டத்தை அதிலும் வீட்டிலே வைத்து பீடி சுற்றும் வேலை செய்யக்கூடிய ஏராளமான பெண் தொழிலாளர்கள் உள்பட, அவர்களுக்கு அந்த சட்டம் அமுலாக்காமல் பீடி முதலாளிகள் ஏமாற்றி வருவதை தடுப்பதற்கு வழிமுறைகளை சொல்வதற்குத்தான் முத்தரப்பு கமிட்டி. அந்தக் கமிட்டிக்கு காரியங்களைச் சொல்வதற்கோ, அல்லது ஆலோசனைகளை முன் வைத்து நடவடிக்கை எடுப்பதற்கோ அதிகாரம் இல்லையென்ற நிலை வந்துவிட்டால் இந்த முத்தரப்பு கமிட்டியினால் என்ன பலன் ஏற்படும். ஆகவே, வீட்டில் வேலை செய்யும்படியானவர்களுக்கு சட்டப் பாதுகாப்பே இல்லாமல் இருப்பதை உண்டாக்குவதற்கு என்ன குறிப்பான நடவடிக்கைகளை அரசு தன்னிடத்திலுள்ள இலாகா மூலம் செய்ய உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முத்தரப்பு கமிட்டி ஒரு ஸ்டேச்சுடரி கமிட்டி அல்ல. எனவே அதை கலைத்து விடலாமா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும் இப்போது அவர்கள் செய்திருக்கிற பரிந்துரைகளை அரசு கவனிக்க இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர், வீட்டில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இந்த அரசு என்ன நன்மை செய்திருக்கிறது என்று கேட்டார்கள். 27—7—1978-ல் கோயம்புத்தூரில் நடைபெற்ற முத்தரப்பு குழுக் கூட்டத்தில் வேலை அளிப்போர் தொழிலாளர்களுக்கு 1—1—1978 முதல் வேலை செய்த 20 நாட்களுக்கு ஒரு நாள் வீதம் சம்பளத்துடன் கூடிய விடுமுறையும், மற்றும் பண்டிகை கால விடுமுறைகளும் அளிப்பதற்கு சம்மதித்தனர்.

1981 பிப்ரவரி 27]

(2) 31—7—1978-ல் திருநெல்வேலியில் நடந்த முத்தரப்புக் குழுக் கூட்டத்தில் 1—10—1977 முதல் வீட்டுத் தொழிலாளர்கள் உள்பட எல்லாக் தொழிலாளர்களுக்கும் அவர்களின் மொத்த சம்பளத்தில் ஐந்து சதவீதம் சம்பளத்துடன் கூடிய விடுமுறையும், அதேபோன்று மூன்று சதவீதம் தேசிய மற்றும் பண்டிகைக் கால விடுமுறைகளையும் அளிப்பதற்கு வேலையளிப்போர் சம்மதித்தனர்.

(3) பீடி தவிர வீட்டுத் தொழிலாளர்களுக்கு சுருட்டப்பட்ட ஒவ்வொரு ஆயிரம் பீடிகளுக்கு 35 பைசா வீதம் போனஸ் அளிக்கப்படுகிறது.

[முற்பகல் 10·00]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்து இருக்கும்படியான இந்தப் பதில் நிறைவேற்றப்பட்டால் அது மிகவும் பிரயோஜனம் உள்ளதாக இருக்கும். ஆனால் வீட்டுத் தொழிலாளர்கள் யார் யார் என்பதைத் திட்டவட்டமாக வரையறுத்து வீட்டுத் தொழிலாளர்களைப் பதிவு செய்ய ஏற்பாடு உள்ளதா? இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தவுடன், நிரந்தரமாக சுருட்டுத் தொழிலாளர்களாக இருந்தவர்களை முதலாளிகள் ஏதோவொரு விதத்தில் வெளியேற்றி விட்டு அதே தொழிலாளர்களைத் தினக் கூலிகளாக மாற்றி, அவர்களைச் சர்வீஸ் இல்லாதவர்களாகச் செய்து, இப்படிப்பட்ட கொடுமைகளைச் செய்து அவர்களுக்கு இந்தச் சட்டத்தின் பலன் கிடைக்காமல் இருப்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அதைப் பற்றி அவ்வப்பொழுது வருகின்ற புகார்களைக் கவனிக்கிறோம். இருந்தாலும் இந்தச் சட்டத்தில் பல்வேறு மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று இந்த அரசு கருதுகிறது. அண்மையில் டெல்லியில் ஹோம் ஒர்க்கர்ஸ்— வீட்டுத் தொழிலாளர்களின் பிரச்னைகளைப் பற்றி விவாதிக்க ஒரு கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். அதனுடைய நடவடிக்கை வந்த பிறகு அதைப்பற்றி விவரமாகப் பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜி. மூர்த்தி : தலைவரவர்களே, அவுட் ஒர்க் செய்கின்ற ஆண், பெண், தொழிலாளர்களுக்குப் பிராவிடண்ட் பண்ட் பிடிப்பது இல்லை ; போனஸ் சரிவரத் தருவது இல்லை. இப்படிப்பட்ட முறையிலே தொழிலாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தி வருகின்ற முதலாளிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, சட்ட மீறல்களுக்காக 1979 ஆம் ஆண்டில் 119 வழக்குகளும், 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையில் 118 வழக்குகளும் தொடரப்பட்டிருக்கின்றன.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, பீடி, சுருட்டுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற ஆண், பெண், தொழிலாளர்கள் புகையிலே மத்தியிலே வேலை செய்வதால் நோய் வாய்ப்பட்டு பாதிக்கப்படுகிறார்கள். அவர்களின் இந்த நிலைமைகளைக் கருதி அவர்களை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மருத்துவப் பரிசோதனை செய்ய வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இதற்கும் மூலக் கேள்விக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை.

திரு. இரா. கருப்பையா: பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டம், பீடி சுருட்டுத் தொழிலாளர் வேலை நிலை பாதுகாப்புச் சட்டம் என்பது 1966-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் செல்லாது, தொழிலாளர்களுக்குப் பயன் கிடைக்கக் கூடாது என்று எட்டாண்டுகள் வழக்குகள் தொடர்ந்து, 1974-ஆம் ஆண்டில் இது செல்லும் என்று உச்ச நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி இன்றைய தினம் ஹோம் ஒர்க்கர்ஸ் என்று சொல்லக்கூடிய பீடித் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்களினுடைய எண்ணிக்கை எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அரசு அறிந்து அந்தப் புள்ளி விவரங்களை வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து, இந்த ஹோம் ஒர்க்கர்ஸ் அனைவருக்கும் இந்தச் சட்டப்படி பதிவு செய்வதற்கு அரசு (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சம்பந்தமாக திரு. ரமணி அவர்கள் கேட்டுவிட்டார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, சட்டப்படி நடக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதன் எண்ணிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்குக் கூறியிருக்கிறேன்.

திரு. எஸ். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவரவர்களே, பீடித் தொழிலாளர் சம்பந்தமாகப் பலமுறை அரசு முத்தரப்புக் கமிட்டி சொல்லியும்கூட பீடி முதலாளிகள் அதை அமல் நடத்த மறுக்கின்ற காரணத்தால் பல்வேறு சட்டங்களைக் கொண்டு

வருகின்ற நம்முடைய மாநில அரசாங்கம் அவுட் ஓர்க் முறையை ஒழித்து பேக்டரியிலேயே வேலை நடத்த வேண்டுமென்று அவசரச் சட்டம் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் வர்க்கத்திற்கு உபயோகம் என்று சொன்னால் அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும் ; அவசரச் சட்டம் கொண்டு வருவது பற்றியும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. மு. சுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, 1966 பீடித் தொழிலாளர்களுடைய பாதுகாப்புச் சட்டத்திலே வாராந்தர விடுமுறைகளுக்கு ஊதியம் வழங்க வேண்டுமென்று இருக்கிறது; தமிழகத்திலே வாராந்திர விடுமுறைக்கு ஊதியம் வழங்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அது அமல் படுத்தப்படுவதில்லை. ஆகவே, முழுமையான அளவில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், வீடுகளிலே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு லைசென்ஸ் வாங்கிக் கொடுத்து, வேலை அளிக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. பீடித் தொழிற்சாலை உரிமையாளர்கள் அத்தகைய லைசென்ஸ் பெறாமலே, தொழில் நடத்துகிறார்கள். அதனால் அரசுக்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, தொழிற்சாலை உரிமையாளர்கள் லைசென்ஸ் பெறுகின்ற முறையிலே நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, லீவுக்குப் பதிலாக எப்படி பணம் தரப்படுகிறது என்பதைக்கூறினேன். எனவே, அவர்களுக்கு லீவு கிடைக்கிறது. லீவாகக் கொடுக்காமல் அதற்கு வேண்டிய பர்சன்டேஜ் பணம் கொடுக்கப்படுகிறது. மற்றபடி, ஏதாவது, தவறுகள் நடக்குமேயானால், அதை மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் மூலம் கடன்கள்.

*வினா எண். 293—வேடசெந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் கடன் வழங்குவதற்கு 10 வீடுகள் இருந்தால்தான் கடன் கொடுக்கபடும் என்று விதி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவ் விதியை அரசு தளர்த்துமா ?